சாட்சிகள் வாக்குமூலம்
பாகம் 111 சுற்றறிக்கை உத்தரவு 2(11) உவிமுச பிரிவு 1 மற்றும் 2
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
O.S. No.67 /2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சப்ரீனா ஆப்ரின் (பி.வா.சா.–1) | தொழில் | | |
| த/பெ. க/பெ. | : | | வயது | | 29 |
| தாலுகா | : | பழனி | நாள் | : | 09.09.2026 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

1973 ஆம் வருடத்திய வரைமுறைச் சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்ஙனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09 ஆம் நாள் அளித்த சாட்சியம்.

பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை சத்தியப்பிரமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். கூடுதல் பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை தான். அவை எனக்கு நன்றாக தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.4 | | எனது ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல். |

(மேற்படி சாட்சியத்தையும், சான்றாவணங்களையும் ஏற்று வாதி கோரிய பரிகாரங்களை வழங்கி உத்தரவிட வேண்டுகிறேன்.)

**குறுக்கு விசாரணை :**

1. நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் B.Sc., Agriculture படித்துள்ளேன். என்ன வேலை பார்க்கிறேன் என்றால் Bank of India, பழனி கிளையில் பணிபுரிந்து வருகிறேன். எத்தனை வருடமாக வேலை பார்க்கிறேன் என்றால் சுமார் 7 வருடமாக வேலை பார்க்கிறேன். எனக்கும் வாதிக்கு கடந்த 20.08.2023 ஆம் தேதி பழனியில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்னர் நடந்த நிச்சயதார்த்தத்தின் போது 2 பவுன் நகையும், திருமணத்தின் போது 3 பவுன் நகையும் சேர்த்து மொத்தம் 5 பவுன் தங்க நகைகள் வாதி எனக்கு

மஹர் ஆக கொடுத்துள்ளார் என்றால் சரிதான். திருமணத்தின் போது பெற்றோர் எனக்கு கொடுத்த நகைகள் என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். வாதி கொடுத்த 5 பவுன் நகைகள் என்னிடம் உள்ளதா என்றால் 3 பவுன் நகை தான் என்னிடம் உள்ளது. 2 பவுன் நகை இன்னும் கொடுக்கவில்லை.

2. திருமணத்தின் போது எனக்கு கொடுத்த சீர்வரிசைகள் என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். திருமணம் நடைபெற்ற போது நான் Bank of India தேனி கிளையில் வேலை பார்த்து வந்தேன். எனக்கும் எனது கணவருக்கும் திருமணத்தின் பயனாக கடந்த 08.08.2024 ஆம் தேதியன்று பெண் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். எங்கள் குழந்தை தற்போது என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். வாதியிடமிருந்து எனக்கு முன் பின் ஜுவனாம்சம் எதுவும் வேண்டாம் என்றால் எனக்கு வேண்டாம். எனது கணவர் வாதி கடந்த 04.07.2025 ஆம் தேதியன்று சேர்ந்து வாழ வேண்டும் என்று எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். நான் கடந்த 02.06.2026 ஆம் தேதியன்று வாதிக்கு குலா அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்க எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். எனக்கு வாதி மஹர் ஆக கொடுத்த 2 பவுன் நகையை இன்று நான் பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். மொத்த 5 பவுன் நகையில் தற்போது 2 பவுன் நகை வாதி என்னிடம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். எனக்கும், எனது குழந்தைக்கும் வாதியிடமிருந்து எந்த ஜுவனாம்சமும் வேண்டாம் என்றால் சரிதான்.

**மறு விசாரணை : இல்லை.**

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledge by him/her to be correct

APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.09.09 17:13:45 +0530

District Munsif,
Palani.